பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 11 2026 06 45

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட Pralay ஏவுகணை வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

3. தீபாவளியை முன்னிட்டு, நியாய விலைக்கடைகளில் அனைத்து அத்தியாவசிய பொருட்களும் கிடைப்பதை உறுதி செய்யுமாறு, அதிகாரிகளுக்கு மாநில அமைச்சர் திரு. வெங்கடரமணன் அறிவுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மாநில அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

5. இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் ராஜ்குமாரி Lanchenbi Chanu வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் இந்திய பாதுகாப்பு படைகளின் நவீனமயமாக்குதல் குறித்த ஆலோசனை குழுக்கூட்டத்திற்கு தலைமையேற்று பேசுகையில், அவர் இதனை குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டில் பாதுகாப்பு துறைக்கு சாதனை அளவாக 7 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள பாதுகாப்புப் படையினர் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தொழில்நுட்பம் சார்ந்த நவீன போர்க்களத்தின் மாறிவரும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், பாதுகாப்புப் படையை வலுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை திரு. ராஜ்நாத் சிங் பட்டியலிட்டார்.

<><><><><><><><>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட Pralay ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை நடத்தியுள்ளது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் இருந்து, ஏவப்பட்ட இந்த ஏவுகணை 500 கிலோமீட்டர் தொலைவில் இருந்த இரண்டு இலக்குகளை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல்வேறு வகையான ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையில், இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

முன்னதாக, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருகில் உள்ள கிராமங்களில் இருந்து 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டதாகவும், DRDO தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதார்களுக்கு நியாய விலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கடரமணன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமது துறைசார்ந்த அதிகாரிகளுடன், நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியதாக அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், நவம்பர் மாத்திற்கான அத்தியாவசிய பொருட்கள் முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அனைத்து மாவட்டங்களிலும் போதிய அளவு ரேஷன் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<><><><><><><><>

வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் இலவச - வேட்டி சேலை உற்பத்தி பணிகள் நிறைவடைந்து, பொங்கல் பண்டிகைக்கு முன்பாக அவை மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில், எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

<><><><><><><><>

தமிழகத்தில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. வீரபாண்டியன், பண்டிகைகாலத்தை முன்னிட்டு, போர்க்கால அடிப்படையில் விலை உயர்வை கட்டுக்குள் கொண்டுவர முதலமைச்சர் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

<><><><><><><><>

நாகை மாவட்டம் திருக்கண்ணங்குடி அருகே கடந்த 31 ஆம் தேதி நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு, 40 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவிட்டுள்ளார்.

நாகை மாவட்ட ஆயுதப்படையை சேர்ந்த இரண்டாம்நிலை காவலரான ஜனார்த்தனன், ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழா பாதுகாப்பு பணிக்கு சென்றுவிட்டு வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்த போது, எதிரே வந்த லாரி மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருடைய உயிரிழப்புக்கு முதலமைச்சர், இரங்கல் தெரிவித்திருப்பதுடன் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவி வழங்க உத்தரவிட்டிருப்பதாக அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<><><><><><><><>

விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இணையதளம் வாயிலாக வழங்கப்பட உள்ள இந்த பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><><>

தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக துணைவேந்தர்கள் இல்லாமல் செயல்படும் 14 பல்கலைக்கழகங்களை இயல்புநிலைக்கு கொண்டுவர எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து, விளக்கம் அளிக்குமாறு, உயர்க்கல்வித்துறை செயலாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையின் போது, நீதிபதி திரு. ஆனந்த் வெங்கடேஷ் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் தொடர்பான வழக்கில், துணைவேந்தர்கள் இல்லாமல் இயங்கும் பல்கலைக்கழகங்களில் முக்கிய முடிவுகளை எடுப்பது குறித்து

அறிக்கை அளிக்க உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஏற்கனவே உத்தரவிட்டிருப்பதை நீதிபதி சுட்டிக்காட்டி விசாரணையை வரும் 17 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

<><><><><><><><>

நேபாளத்தில் நேற்று ஏற்பட்ட ஹெலிகாப்டர் விபத்து குறித்து, அந்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபைகளுக்கான இடைக்காலத் தேர்தல் நிறைவடைந்திருக்கும் நிலையில், வாக்கு எண்ணிக்கை தொடங்கியுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலங்களவை இடைத்தேர்தலில் இரண்டு சுயேட்சை வேட்பாளர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதால், பி.ஜே.பி. சார்பில் போட்டியிட்டுள்ள மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, போட்டியின்றி தேர்வு செய்யப்படுகிறார்.

பொதுக்குகணக்குக் குழு தலைவர்களின் மாநாடு திருவனந்தபுரத்தில் இன்று நிறைவடைகிறது.

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே பாசிப்பட்டணம் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த பல கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நாகை மாவட்டம் முழுவதும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில், இரவு நேரங்களில் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகனச் சோதனையில் காவல்துறையினர் ஈடுபடுவதை, காவல் கண்காணிப்பாளர் திரு. கேழ்கர் சுப்பிரமணிய பாலசந்திரா ஆய்வு செய்தார்.

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே பட்டா மாறுதலுக்காக 25 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட புகாரில், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் இடைத்தரகரை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்றிரவு மின் கம்பிகள் தீப்பற்றியதால் சுமார் மூன்று மணிநேரம் மின்சாரம் தடைபட்டது.

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து பாலாறு படுகை இரண்டாம் பாசனத்திற்காக இன்று முதல் 60 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்புட்குழி ஊராட்சியில் செயல்படும் சமூகநீதி பள்ளி மாணவர் விடுதியில், மாணவர்களுக்கான உணவின் தரத்தை ஆட்சியர் திருமதி. சினேகா ஆய்வு செய்தார்.

<><><><><><><>

இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் மகளிர் Wushu போட்டியில் இந்தியாவின் ராஜ்குமாரி Lanchenbi Chanu வெண்கலப் பதக்கம் வென்றார்.

செனகல் நாட்டின் Dakar நகரில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் Chanu 18 புள்ளி மூன்று ஒன்பது புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பிடித்தார்.

இப்போட்டியில் Wushu பிரிவில் இந்தியா பெற்றுள்ள முதலாவது பதக்கம் இதுவாகும்.

பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தேவ் Rupaarelia மற்றும் Tanvi காலிறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

Senegal-லில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Dev Rupaarelia, கனடாவின் Shaurya Gullaiya -வை 23-25, 21-19, 21-11 என்ற செட் கணக்கில் வென்றார்.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் Tanvi Australia -வின் Smrithi Adepu -வை 21-4, 21-12 என்ற செட்கணக்கில் வென்றார்.

<><><><><><><>

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆக்லாந்தில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி, இந்திய நேரப்படி காலை 7-30 மணிக்கு தொடங்குகிறது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 டுவென்ட்டி - டுவென்ட்டி, ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகிறது.

டுவென்ட்டி-டுவென்ட்டி தொடரை இந்தியா 3-க்கு 2 என்ற ஆட்டக்கணக்கில் வென்றுள்ளது.

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின், இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன், காலிறுதிக்கு முந்தையச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், போலந்தின் Katarzyna Kawa-வை 6-4, 2-6, 7-6 என்ற செட் கணக்கில் வென்றார்.

<><><><>